**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.131 /2023**

**Deposition of P.W.  4– தோமஸ்**

**Dated: 26.11.2025**

**Accused Present.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது வீட்டின் அருகே சுவாமிதாஸ் என்பவர் வீடு உள்ளது. அவர் வீட்டில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாலையில் செல்லும் ஆட்கள் மற்றும் வாகனங்கள் கேமராவில் பதிவாகி இருக்கும் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் ராயப்பன். எனது தாத்தாவிற்கு ரீசர்வே எண்.408/10ல் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவின் மகன்கள் சவேரியார் அடிமை, பிரான்சிஸ், சிலுவை முத்து என்றால் சரிதான். தாத்தா இறந்த பிறகு மூவரும் சொத்தை பிரித்து கொண்டார்கள். ரோட்டிலிருந்து சொத்திற்கு செல்ல தனித்தனியாக பாதை போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். சவேரியார் அடிமையின் மகள்கள் தான் 1, 2 எதிரிகள் என்றால் சரிதான். 3வது எதிரி 1வது எதிரியின் மகன். அ.சா.2 சுந்தர்சிங் சவேரியார் அடிமையிடம் சொத்து வாங்கியுள்ளார். அவர் எனது உறவினர் இல்லை. அ.சா.5 தங்கபாய் எனது மனைவி. அ.சா.6 – அ.சா.2ன் மனைவி. அ.சா.7 எனது தம்பி மனைவி. அ.சா.8 மற்றும் அ.சா.9ம் எனது தம்பிகளின் மனைவிகள். என் வீட்டிற்கு மின்சாரம் செல்ல அ.சா.7 பாதை விட்டு கொடுத்தார் என்றால் சரியல்ல. சொத்து பாகம் பிரிப்பதற்கு முன்னர் அ.சா.7 கண்டத்தின் வழியாக நாங்கள் மின்னிணைப்பு பெற்றோம். என்னையும், சுந்தரையும் மற்றும் பஞ்சாயத்து தலைவரையும் 12.07.2025ம் தேதி விசாரித்தார்கள் என்றால் வழி

பிரச்சனை தொடர்பாக விசாரித்தார்கள். ரீசர்வே எண்.408/10ல் 2வது எதிரிக்கு 4 செண்ட் சொத்து உள்ளது என்றால் சரிதான். எனக்கும். அந்த சர்வேயில் 4–1/2 செண்ட் சொத்து உள்ளது. என் மீது தக்கலை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நடந்தது என்றால் சரிதான். 2வது எதிரிக்கும் எனக்கும் நடந்த சொத்து தகராறு தொடர்பாக நான் 2வது எதிரியை அடித்ததால் என் மீது அவர் வழக்கு கொடுத்தார் என்றால் சரிதான். 2வது எதிரியின் சொத்து வழியாக 5 பேருக்கு வழி தேவைப்படுகிறது. எனக்கும், என் சகோதரர்களுக்கும் 2வது எதிரியின் சொத்து வழியாக பாதை தேவைப்படுகிறது. அது பொது வழிப்பாதை ஆகும். தாத்தாவின் காலத்திலேயே அது பொதுவாக ஒதுக்கப்பட்டுவிட்டது. அந்த பாதையில் மின் கம்பம் இல்லை. குடிநீர் இணைப்பும் கிடையாது. 2வது எதிரியின் சொத்தில் பாதை வைக்க முடியாததால் நானும், பஞ்சாயத்து தலைவரும் சேர்ந்து அவரது சொத்தில் அத்துமீறி நுழைந்து இண்டர்லாக் போட்டோம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன்.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.131 /2023**

**Deposition of P.W. 5– தங்கபாய்**

**Dated: 26.11.2025**

**Accused Present.**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் இண்டர்லாக்கை எடுத்தது குறித்து PDO-விடம் நான் புகார் கொடுத்தேன். எனது வீடு 2வது எதிரியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. பொது பாதையில் மின்கம்பம் கிடையாது. குடிநீர் இணைப்பும் இல்லை. முதல் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் போலீசாரிடமும் சொன்னேன். நான், என் கணவர் மற்றும்பஞ்சாயத்து தலைவர் ஆகியவர்கள் 2வது எதிரியின் சொத்தில் அத்துமீறி நுழைந்து இண்டர்லாக் அமைத்து விட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய் வழக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.131 /2023**

**Deposition of P.W. 6 – வினிதா**

**Dated: 26.11.2025**

**Accused Present.**

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

2வது எதிரியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். 2வது எதிரியின் சொத்து வழியாக எனக்கு பாதை தேவைப்படுகிறது என்றால் பொது வழிப்பாதை வழியாக தான் பாதை தேவைப்படுகிறது. அந்த பாதை எனது ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதையில் நான் நடப்பதை எதிரிகள் தொந்தரவு செய்ய கூடாது என்று நான் வழக்கு போடவில்லை. முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசாரிடமும் சொன்னோம். 2வது எதிரியின் சொத்தில் அத்து மீறி நுழைந்து பாதை அமைத்து விட்டு அதிலிரந்து தப்பிப்பதற்காக அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.131 /2023**

**Deposition of P.W. 7 – சோபி கலா**

**Dated: 26.11.2025**

**Accused Present.**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது வீடு 2வது எதிரியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ளது. இண்டர்லாக் போட்ட இடம் சிமிலாள் வீட்டிற்கு மேற்கு பக்கம் என்றால் சரியல்ல. எனது வீட்டின் அருகே உள்ள பாதையில் மின் கம்பம் உள்ளது. இண்டர்லாக் போட்ட பாதையில் மின்கம்பம் இல்லை, குடிநீர் இணைப்பும் இல்லை. முதல் விசாரணையில் சொன்னதை போல்தான் போலீசாரிடமும் சொன்னேன். 2வது எதிரியின் சொத்தில் அத்து மீறி நுழைந்து பாதை அமைத்து விட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக அவர்களுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.